11th September 1959]

Construction of a new Council Chamber

* 295 *Q.*—Sri S. M. ANNAMALAI : *கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—*

சென்னை (மேல்) சட்டமன்றத்திற்கென கட்டிடம் கட்ட உத்தேசம் உண்டா?

The Hon. Sri C. SUBRAMANIAM : There is a proposal to construct a new Council Chamber at Fort St. George, Madras. Plans and Estimates received from the Chief Engineer, P.W.D. (General) are under consideration.

Sri S. M. ANNAMALAI : *சார், எவ்வளவு தொகையில் இந்தக் கட்டிடம் கட்டப்படும்? இதற்கு சர்க்கார் சாங்கிஷன் கொடுத்தாகிவிட்டதா? மௌண்ட் ரோட்டில் பல லட்சக் கணக்கான ரூபாய் செலவழித்து ஒரு கட்டிடத்தை கட்டிவிட்டு, மறுபடியும் ஒரு புதுக் கட்டிடத்தை கட்டுவது நியாயமா?*

The Hon. Sri C. SUBRAMANIAM : *இது கௌன்சில் சேம்பரை கட்டுவதற்கான ஒரு திட்டம். செலவைப் பற்றிய முழு தகவல் இல்லை. சுமார் 3 லட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

Sri S. M. ANNAMALAI : *சார், சர்க்கார் சாங்கிஷன் வாங்காமலேயே, இப்படி ஒரு திட்டம் தயாரிக்கப்படுவது நியாயமா?*

The Hon. Sri C. SUBRAMANIAM : *இதில் என்ன முறை கையாளப்படுகிறது என்பது கனம் அங்கத்தினருக்கு தெரியாததினால் இந்தக் கேள்வியை கேட்கிறார். இதற்கான எஸ்டிமேட்ஸ், பிளான் இவைகள் வந்த பிறகு, சர்க்காரின் முன்வைத்து பரிசிலனை செய்த பிறகு தான், இதில் ஒரு முடிவு எடுக்க முடியும்.*

Compost manure

* 296 *Q.*—Sri V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total amount sanctioned to the Pudukkottai Municipality for preparing compost manure for the years 1957 and 1958; and

(*b*) the total tonnage of compost manure that has been produced during these years?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No loan was granted to Pudukottai Municipality during 1957–58. A loan of Rs. 20,000 was sanctioned during 1958–59.

(*b*) The municipality produced a quantity of 3,038 tons during 1957–58 and 3,608 tons during 1958–59.

Sri V. ARUNACHALA THEVAR : *சென்ற ஆண்டு எத்தனை ரூபாய்க்கு கம்போஸ்ட் மென்யூர் வாங்கப்பட்டிருக்கிறது?*

The Hon. Sri M. BHAKTAVATSALAM : *அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை.*